சீயாக்காய்ப்பவுடர் பாவனையாளர்களே!
காவேரி
சீயாக்காய்ப் பவுடரை
கேட்டு வாங்குங்கள்
சுத்தமான
சீயாக்காய்ப்பவுடர்
என்று பாவித்தவர்கள்
கூறுகிறார்கள்.
[31665]

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

ஒளி 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 30 வியாழக்கிழமை (14-07-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 228

அளவுப் பிரமாணத்தின் படி
6 வகை
இயற்கை பொருள்களை
கொண்டு தயாரிக்கப்படுவது
காவேரி
சீயாக்காய்ப்பவுடர்
ஒரு முறை பாவியுங்கள்
உண்மையை உணர்வீர்கள்
[31665]

முடிந்தால் அரசியல் தீர்வு
இல்லையேல் ராணுவத் தீர்வு

தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆளும் ஐ.தே.க. அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

இனப்பிரச்சினைக்கு முடிந்தால் அரசியல் தீர்வு காணப்படும்; இல்லையேல் இராணுவரீதியில் தீர்வு காணப்படும்.

— இதுவே தனது கொள்கை என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருக்கிறது.

ஆளும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய சில விடயங்கள் பற்றிய தகவல்கள் நேற்று வெளியாகின. அவற்றின் விபரம் வருமாறு:-

ஜனாதிபதி ஆட்சி முறையை புதிய ஐ.தே.க. அரசு ஒழிக்கும்!

★ ஐ.தே.க. அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும். நாடாளுமன்றத்துக்கு பதிலளிக்கக் கூடிய பிரதமரின் கீழான ஆட்சிமுறை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

படையினருக்கு இலவச காணி

தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான போரில் உயிரிழக்கும் அல்லது ஓய்வு பெறும் அல்லது மரணிக்கும் படையினர் ஒவ்வொருவருக்கும் இரண்டு முதல் ஐந்து ஏக்கர் நிலத்தை ஐ.தே.க. அரசு இலவசமாக வழங்கும்.

வேலையற்ற இளைஞருக்கு மாதம் ரூ.1,200 உதவிதொகை

★ வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு ஆட்சிக்கு வரும் புதிய ஐ.தே.க. அரசு மாதாந்த உதவித் தொகையாக ஆயிரத்து இருநூறு ரூபாவை வழங்கும்.

— இவ்வாறு ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

ஐ.தே. கட்சி வெற்றி பெறுமா? உறுப்பினர் மத்தியில் கலக்கம்

கொழும்பு, ஜூலை 14

ஸ்ரீலங்காவின் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெறுமா என்ற கலக்கம் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு சஞ்சிகை ஒன்று இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

தேர்தல் நடத்துவது என்ற அறிவிப்பு வந்த மிக குறுகிய காலத்தில் ஸ்ரீலங்காவின் இரண்டு பிரதான கட்சிகளும் கடும் பிரயத்தனத்துடன் தமது பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

மக்களைக் கவரும் நோக்குடன் ஐ.தே.க. பல சலுகைகளை முன் வைத்துள்ளது. ஆனாலும் அவற்றில் மக்கள் தற்போது நம்பிக்கையை இழந்துள்ளனர்.

எனினும் மக்களை மேலும் திருப்திப்படுத்தும் நோக்கில் புதிய சலுகைகளை ஐ.தே.க. தொடர்ந்து முன்வைத்து வருகிறது.

உள் முரண்பாடுகளால் பிளவுபட்டிருக்கும் தமது கட்சி மீண்டும் ஒன்று படுத்தப்பட்டு விட்டதாகவும் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சி செய்யும் தகுதி தமது கட்சிக்கு உண்டு என்றும் மக்களை நம்பவைக்க ஆளும் கட்சி பெரும் பிரயத்தனங்களைச் செய்கிறது.

ஆனால் அவை மக்களை திருப்திப்படுத்துமா என்ற சந்தேகம் அக்கட்சியின் உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கே தனது கட்சியின் வெற்றி குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

தொடர்ந்தும் தன்னால் ஆட்சியைக் கொண்டு நடத்த முடியுமா என்ற கேள்வி அவருக்கு எழுந்துள்ளது.

டி.பி. விஜேதுங்காவின் ஆதரவாளருக்கும் காமினி திஸநாயக்காவின் ஆதரவாளருக்கும் இடையில் சிறிது முரண்பாடு தலைதூக்கி உள்ளது.

— இப்படி அந்தச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

யாழ். பல்கலை ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று வேலை நிறுத்தத்திலும் மறியல் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர்.

தொழில் நுட்பவியலாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும், ஊழியர் சங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடே வேலை நிறுத்தத்திற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நியமனத்திற்கான வழி முறைகளில் பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த முரண்பாடான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் 10 ஆம் திகதி ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக அவ்வித பேச்சுவார்த்தைக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் அழைக்கவில்லை என்றும் ஊழியர் சங்கம் குற்றம் சாட்டுகிறது. (ஒ)

திருகோணமலையில் 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 14

திருகோணமலை மாவட்டம் கடவானைப் பகுதியில் கடந்த ஐந்தாம் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்தனர். [illegible]

கப்டன் இராமன் அல்லது தம்பண்ணன் (திருகோணமலை - சந்தனன் செல்வத்துரை), லெப்டினன்ட் சிவசீலன் அல்லது இளங்கோவன் (திருகோணமலை - மகேந்திரன் நிர்மலானந்தன்), வீரவேங்கை வாந்தீபன் (திருகோணமலை - [illegible]) ஆகிய மூன்று போராளிகளுமே வீரச்சாவடைந்தனர். (உ-4)

ஓர் அகதிமுகாமில் இரண்டரை லட்சம் பேர்!

கொவி, ஜூலை 14

உலகிலேயே மிகப்பெரிய அகதி முகாம் தன்சானியா நாட்டில் உள்ள என்காராவில் அமைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ருவாண்டா யுத்தம் காரணமாக அந்த நாட்டை விட்டு வெளியேறிய சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் [illegible] அகதிகள் இந்த முகாமில் உள்ளனர் எனத் [illegible] இறது. (உ-எ-6)

படகுச் சேவை தடைப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போது வீசி வரும் கடும் காற்று காரணமாக கிளாலி — பூநகரிப் படகுச் சேவை தடைப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலைமை சீரானதும் படகுச் சேவை வழமைபோல் மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

ஹெலித் தாக்கு

வடமராட்சி, ஜூலை 14

தொண்டமானாறு பகுதியில் நேற்றுக் காலை (புதன்) 7.55 மணியளவில் ஹெலி ஒன்று கலிபர் தாக்குதலினை மேற்கொண்டது.

சுமார் 15 நிமிடங்கள் வரை தாக்குதல் நீடித்தது. (ஒ-173)

பொலிஸுக்கு 71 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 14

கடந்த திங்கள் முதல் நேற்று முன் தினம் காலை வரை தென்பகுதியில் தேர்தல் குற்றங்கள் தொடர்பாக 71 முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று பெல்மதுளை நகரில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்த மேலும் அறுவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

2 வேங்கைகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் வன்னி மாவட்டத்தின் பிரமணாலன் குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம்மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருபோராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வவுனியா கோட்டப் பொறுப்பாளர் மேஜர் வாசன் அல்லது மன்னன் என அழைக்கப்படும் செட்டிக்குளத்தைச் சேர்ந்த பாலசிங்கம் விக்னேஸ்வரன், இரண்டாம் லெப்டினன்ட் பூபாலன் என அழைக்கப்படும் வவுனியா கிளாத்திக்குளம் இரணைஇலுப்பைக் குளத்தைச் சேர்ந்த யோகராசா சிவமூர்த்தி ஆகிய இருபோராளிகளுமே வீரச்சாவடைந்தனர். (உ-4)

முச்சந்தி முனி



[illegible] வீட்டிலை சோம்பல் முறிப்பவர் [illegible] இங்கே......!

அவசரகாலச் சட்டம் நாளையுடன் காலாவதி!

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் தற்போது அமுலில் உள்ள அவசரகாலச்சட்டத்தை நாளை வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாக விடுவது என ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

அவசரகால நிலைமை அமுலில் இல்லாத நிலையில் தேர்தலை நடத்த அரசு விரும்புவதாக அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட விதிகளுக்கு அமையவே —

வடபகுதிக்கு குறிப்பிடப்பட்ட சில பொருள்களை எடுத்து வருவதைத் தடை செய்யும் பிரகடனத்தை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார் என்பது தெரிந்ததே.

அவசரகாலச்சட்டம் காலாவதியாவதால் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட அந்தப் பிரகடனமும் செல்லுபடியற்றதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ-4)

தேர்தல் கால வன்செயல்கள்

மோதல்கள் தொடர்கின்றன; ஐம்பது வாகனங்கள் சேதம்!

எதிரணி வேட்பாளரும் கைது; இதுவரை இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 14

தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் எதிரணி வேட்பாளர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல்களில் ஐம்பதுக்கு அதிகமான வாகனங்கள் சேதமடைந்தன. இரு கட்சிகளையும் சேர்ந்த நூற்றுக்கு அதிகமானோர் காயமடைந்தனர் என ஏ.எப்.பி. செய்திஸ்தாபனம் அறிவித்தது. 23 மாவட்டங்களில் 18 மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை முதல் நடந்த தேர்தல் வன்செயல்களில் இதுவரை குறைந்தது 2 பேர் கொல்லப்பட்டனர் என்றும் —

நூற்றுக்கு அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி தூர கிழக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது.

இதேவேளை —

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் கடைசித் தினமான திங்கட்கிழமை முதல் நடைபெற்ற வன்செயல்களின் பின்னால் ஆளும் கட்சியும் எதிரணியும் செயல்பட்டன என்று இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஒ-எ)

கலைஞர்களின் கூட்டத்தில் ஐ.தே.க. குண்டர் அட்டகாசம்!

ஆளும் கட்சிப் பிரமுகரின் ஏற்பாடாம்

சுதந்திரக் கலைஞர்கள் கூட்டணி ஒன்றை அங்குரார்ப்பணஞ் செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை கொள்ளுப்பிட்டியில் உள்ள "குருகெதற"வில் நடைபெற்ற கூட்டத்தில் திடீரென நுழைந்த குண்டர்கள் சிலர், அங்கு கூடியிருந்தவர்கள் மீது தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்திய குண்டர்களில் மூவரை கூட்டத்தில் கலந்து கொண்ட கலைஞர்கள் சிலர் பிடித்து நேற்று முன்தினம் இரவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அம்மூவரில் ஒருவர் பொலிஸ் அதிரடிப்படையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் ஐ.தே.க. உறுப்பினரும் கூட என்றும் சொல்லப்பட்டது.

மூன்று நபர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். கட்சிப்பிரமுகர் ஒருவரின் கட்டளையின் படியே தாங்கள் இத்தாக்குதலை நடத்தியதாக அவர்கள் அப்போது ஒப்புக்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அப்பிரமுகரின் பெயர் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

எதிரணி முன்னாள் எம்.பியின் இல்லம் கல்வீச்சினால் சேதம்

முன்னாள் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேமுனி டி சொய்சாவின் வீடு நேற்று முன்தினம் மாலை கல்வீச்சுக்கு இலக்கானது என்றும் —

அதனால் அவரது வீடு பலத்த சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்குச் சொந்தமான ஏழு வாகனங்களில் வந்திறங்கியவர்களே இத்தாக்குதலை நடத்தினார்கள் என்றும் —

அவர்கள் மத்தியில் அமைச்சர் தர்மதாஸ பண்டா ஆளும் கட்சி முன்னாள் எம்.பி. ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் காணப்பட்டனர் என்றும் விஜேமுனி டி சொய்சா வெரித்தாஸ் வானொலியின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது, பொலிஸார் பார்த்துக்கொண்டு நின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஒ-எ-6)

ஐ.தே.க. சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர் பொலிஸார்!

கொழும்பு, ஜூலை 14

பிபிலை மற்றும் மெதகம பகுதிகளில் பொலிஸார் ஆளும் ஐ.தே.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டி வருவதாக முறையிடப்பட்டுள்ளது.

பிபிலை மற்றும் மெதகம பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளே இதனைத் தலைமை வகித்து நடத்துகின்றனர் என்று எதிரணியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி.விஜேமுனி டி. சொய்சா தெரிவித்தார்:

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி விஜேமுனி டி சொய்சா அப்பகுதி பிரதிப் பொலிஸ் மாஅதிபரிடம் கேட்டுள்ளார். (ஒ-எ-6)

படை அதிகாரி, சிப்பாய் பூவரசங்குளத்தில் பலி

கொழும்பு, ஜூலை 14

வவுனியாவின் பூவரசம் குளத்திற்கு மேற்கேயுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களுக்கு அண்மையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை மையத்தகவலை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இத்தகவலைத் தெரிவித்தது. (உ-4)

கோமாரி கப்பல் மீண்டும் மாவுடன் திரும்பி வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போதைய மா தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு கோமாரி கப்பலில் மீண்டும் ஒரு தடவை திருகோணமலையிலிருந்து மா ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் மாவை இறக்கி முடித்து விட்டு, செவ்வாய் இரவு பருத்தித்துறையில் இருந்து திருமலைக்குச் சென்றது.

திருமலையில் மா ஏற்றிக் கொண்டு இக்கப்பல் உடனடியாக பருத்தித்துறைக்கு இன்னும் சில தினங்களில் வந்து சேரும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-173)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

எமது சமீபத்தில் 1,872 வெற்றுச்சாக்குகள் (2-ம்தரம்) விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்பவர்கள், அலுவலக நேரத்தில் பார்வையிட்டு தங்கள் முத்திரை பொறிக்கப்பட்ட கூறு விலையை கீழ்காண் விலாசத்திற்கு 20-07-94 ஆம் திகதி 3 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். பொதுமுகாமையாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (இ-8787)

தேவை

சந்திரமடம், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கொக்குவில், நீராவியடி பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை தரகர்களும் தொடர்புகொள்ளலாம். ஸ்ரீ தனபால விற்பனை நிலையம், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (31900)

காவேரி சீயாக்காய்

கண் குளிர்மை, ஞாபக சக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும், பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும், முடி உதிர்வதை தடுப்பதற்கும் நீங்கள் பாவிக்க வேண்டியது காவேரி சீயாக்காய்ப் பவுடர். (31788)

பெயர்மாற்றம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இணைப்பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இணைப்பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம்.

(31668)

இலகு திருமண சேவை

29 வயது, கார்த்திகை, செவ்வாயற்ற, UK இல் சொந்த வியாபாரம் நடத்துபவருக்கு காரைநகரைச் சார்ந்த மணப்பெண் U.K இல் அல்லது இலங்கையில் தேவை. தொடர்பு து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (31866)

இடமாற்றம்

ஒட்டுமடம் பொன்னப்பா ஒழுங்கையில் இயங்கிவந்த எனது வைத்தியசாலை தற்பொழுது யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சந்திக்கு அருகாமையில் (சிவன் வடக்கு வீதி) இயங்கிவருகிறதென்பதை அறியத் தருகிறேன். வைத்தியர் சிவசம்பு.

(31858)

ஐங்கரன் பாமாலை

விநாயகப் பெருமான் மீது தமிழில் பாடப்பட்ட 48 கீர்த்தனைகளைக் கொண்டது. பாடியவர் 'முருகு'. இப்பொழுது விற்பனையாகின்றது. விலை ரூபா 35/-.

(31887)

பொது தேர்தல் கருத்துக் கணிப்பு

கொழும்பு, ஜூலை 14 எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் சேர்ந்து ''சண்டே ரைமஸ்'' பத்திரிகை நடத்தும் கருத்துக் கணிப்பின் முதற் கட்ட முடிவுகள் இம் மாதக் கடைசியில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ எ)

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு! பேன், சொடுகு வராது தடுப்பதற்கு! கேசம் வளர்ச்சி பெறுவதற்கு! கேசம் பட்டுப்போல் மினிர்வதற்கு! கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு! கேசத்தை குளிர்ச்சியூட்டுவதற்குத் தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்க:

சித்த வைத்திய நிபுணரும், கைதடி சுதேச வைத்திய சமிதி தலைவருமான

Dr. K. T. S. சபாநாதன்

அவர்கள் வழங்கிய ஆலோசனையின்படி தயாரிக்கப் பெற்றது.

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

கேட்டு வாங்கிப் பயன்பெறுங்கள்.

தயாரிப்பாளர்:

ஸ்ரீ சச்சிதானந்த களஞ்சியம்,

ஆசிரம அருகாமை, கைதடி.

(சி-8635)

உ

சித்தன்கேணி

சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான

பாராட்டு விழா

காலம்: 14 – 07 - 1994 வியாழன் இ.வு 8மணிக்கு

★ பாராட்டி கௌரவிக்கப்படுபவர்கள்:

1. மஹோற்சவ குரு 'சித்தாந்த பண்டிதர்' 'சிவாகம வித்பத் ஜோதி' சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்
2. விழாக் காலத்தில் திருவிளையாடற் புராணத்தொடர் சொற்பொழிவு செய்த தமிழ் அருவி திரு. த சிவகுமாரன் அவர்கள் (காரைநகர் - கம்பன் கழக அமைப்பாளர், யாழ். இந்து ஆசிரியர்)

இருவரது தெய்வீக பணிகளையும் பாராட்டி தேவஸ்தானத்தாரால் கௌரவிக்கப்படும் விழாவில் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.

— தேவஸ்தானம்:

[7521]

பணிநிலை வெற்றிடங்களுக்கான பணியாளர் தேவை

கொடிகாமம் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கவுள்ள வாணிப நிறுவனமொன்றிற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

பணிநிலை:- கணக்குப் பதியுநர் (கொடிகாமம்)
இடம்:- கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்
அகவை:- 25 — 40
தகைமை:- கணக்குப் பதியுநராக கடமையாற்றிய முன்னனுபவம் அல்லது க. பொ. த. (உ.த) வர்த்தகப்பிரிவில் இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தி, மருந்து பற்றிய அனுபவம் விரும்பத்தக்கது

பணிநிலை:- மருந்து விற்பனையாளர் (கொடிகாமம்)
அகவை:- 18 க்கு மேல்
தகைமை:- மருந்து விற்பனையாளராக அல்லது வேறு ஆங்கில மருந்து பற்றிய அனுபவம்

பணிநிலை:- கணக்குப் பதியுநர் (பெவி)
இடம்:- (வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்டவர்)
தகைமை:- கணக்குப் பதியுநராக கடமையாற்றிய அனுபவம் அல்லது க. பொ. த. (உ.த) இரண்டு பாடங்களுக்கு மேல் சித்தியடைந்தவர். மருந்து பற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவு நாள்:- 31—07—1994

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

விளம்பர இல. 667.
C/O. உதயன்,
யாழ்ப்பாணம்.

[31893]

உ

சிவமயம்

ருதுசோபன அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான பவ வருடம் ஆனித்திங்கள் 31 ஆம் நாள் (15 - 07 - 1994) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிமுதல் 10-00க்குள்ளாக வரும் சுபவேளையில்,

எமது ஏக புத்திரி

செல்வி துஷ்யந்திக்கு

ருதுசோபன வைபவம், யாழ் நல்லூர் சிவன் கோயில் முன்பாக உள்ள 133 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறவுள்ளதால், தாங்கள், தங்கள் பந்துமித்திர சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு: திருமதி ந. மகேஸ்வரக் குருக்கள்
(முருகன் கோயில்
பங்களாவடி, வேலணை)

வதிவிட முகவரி:
98, பூதவராயர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[31896]

யாழ். றோட்டறிக் கழகம் வசதி குறைந்தோருக்கான இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் - 3

ஆரம்பப் பரிசோதனை

இடம்: இணுவில் மக்லியொட் வைத்தியசாலை, காங்கேசன்துறை வீதி, இணுவில்.

காலம்: 17-07-94 ஞாயிறு காலை 7 30 மணி

'கற்றக்' நோயாளர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு இணுவில் மக்லியொட் வைத்தியசாலையில் ஆரம்பப் பரிசோதனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர்
யாழ். றோட்டறிக்கழகம்

892/2, நாவலர் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

(பாண்) வெதுப்பி - 7/50

15 - 07 - 94 வெள்ளிக்கிழமை முதல்

மாவின் விலை அரசாங்கத்தால் கிலோவுக்கு ரூபா 1/50 குறைக்கப்பட்டிருப்பதனால் வெதுப்பியின் (பாணின்) விலை -/50 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்: ஆகவே வெதுப்பியின் (பாணின்] விலை நாளை 15 - 07 - 94 முதல் ரூபா 7/50ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

விலை, தரம், நிறை ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு அறியத்தரவும்.

ந. பாலவிநாயகர்,
மாவட்டச் செயலாளர்,
யாழ். மா. வெ. உ. சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(31902)

நல்லூர் வணிகர் கழகம் முக்கிய அறிவித்தல்

அனைத்து வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று 15 - 07 - 94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இக்கலந்துரையாடலின் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது வர்த்தகர்கள், ஊழியர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணிப்பாளர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள வேண்டி இருப்பதால் வர்த்தக நிலையங்களை பூட்டி விட்டு இதில் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

செயலாளர்,
சு. தனபாலசிங்கம்.

(இ-8738)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 04 — 1955

மறைவு: 17 — 06 — 1991

வேலணை மேற்கைச் சேர்ந்த - கரம்பன் கிழக்கில் வாழ்வு கொண்ட

அமரர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

(பிரபல வர்த்தகர் - உரிமையாளர் லிங்கம் ஸ்ரோர்ஸ், கரடிப்போக்கு கிளிநொச்சி)

திதி: **14-07-94**

ஆண்டு மூன்றாகியதே ஐயோ நான் என்ன செய்வேன்
நீண்ட உன் பேருருவம் நிழல் ஆடி நிற்குதைய்யா
ஆண்டாண்டு காலமாய் வாழலாம் என்றிருந்தேன்
அநியாயமாய்க் காலன் அபகரித்து சென்றானே!

அப்பாவின் முகங்காண ஆசையோடு பிள்ளை தனை
எப்பாடுபட்டு நான் இசைக்க முயலுகின்றேன்
தப்பேதும் செய்யாமல் தண்டனை கொடுத்துவிட்ட
[illegible] காலன் உனை அபகரித்து விட்டானே!

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

58, [illegible]
[illegible]
யாழ்ப்பாணம்.

(31897)

தேர்தலை அவதானிக்க உதவும் நாடுகள் விருப்பம்

கொழும்பு, ஜூலை 14 எதிர்வரும் பொதுத் தேர்தல் நடைபெறும் விதத்தை அவதானிப்பதற்கு இலங்கைக்கு உதவி வழங்கும் ஐரோப்பிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இதற்காகத் தங்கள் பிரதிநிதிகளை கொழும்புக்கு அனுப்ப இந்த நாடுகள் முடிவு செய்துள்ளன. இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பங்களை இந்த நாடுகள் கொழும்பு அரசுக்கு அனுப்பி வைத்துள்ளன என்று லங்காதீப சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை—

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டும் வாய்ப்பு எந்த அரசியல் கட்சிக்கு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுமுகமாக அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-9)

விஸ்வப் பிரம்மனே நம

புங்குடுதீவு பிட்டியம்பதி

ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவதின விழா

அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழாவான இன்று 14 - 7 - 1994 வியாழக் கிழமை யாழ். கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு விசேட அபிஷேகமும் பொங்கலும் நடைபெற இருப்பதால் அடியார்கள் வருகை தந்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்:

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

(7525)

திருமறைக் கலாமன்ற

கவின்கலைகள் பயிலக

மாணவர்களின்

ஓவியக் கண்காட்சி

நாட்கள்: 1994 ஜூலை 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகள்
நேரம்: காலை 9 மணி மாலை 5 மணி
இடம்: மன்றக் கேட்போர் கூடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8735)

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு விழா

இடம்: யாழ். பல்கலைக்கழகம்

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையின் முழுப்பங்களிப்புடன் நடத்த இருக்கும் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு விழா 22-07-1994 வெள்ளிக்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் மாலை 6-00 மணிவரை நடைபெறும்.

புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் மட்டும் 23-07-1994 சனிக்கிழமை நடைபெறும்.

இறைபணியில் அன்புள்ள
சுவாமி சித்ரூபானந்தா.

(இ-8740)

ஓராண்டு நினைவஞ்சலி

உதயத்தில் கண்டது! 01 — 02 — 1952

உதிரத்தில் உறைந்தது! 25 — 06 — 1993

அமரர்

சிதம்பரப்பிள்ளை திருஅருட் செல்வம்

(O. E. S. மாவட்டப் பதிவகம், செயலகம் யாழ்ப்பாணம்)

திதி: 14 — 07 — 1994

இடர் கோடி வந்த போது
சுடராக இருந்த நீங்கள்
சுடராகிப் போனதனால்
இடர் மூழ்கித் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.

அம்மா, மனைவி, மக்கள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

இல. 30, பாரதி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[31904]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

தேர்தலும் பேரினவாதிகளும்

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வுகாணப்படும் என்பது குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என்று மகா சங்கத்தினரும், காமினி ஜயசூரிய தலைமையிலான சிங்கள-பௌத்த தீவிரவாதிகளும் கோரி உள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தான். இதில் சந்தேகமில்லை.

இந்த இருகட்சிகளில் ஒன்றுதான் அதிகாரத்துக்கு வரப் போகிறது.

இப்படியான நிலையிலேயே மகாசங்கத்தினரும் சிங்கள-பௌத்த தீவிரவாதத் தலைவர்களும், வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்து நிலைப்பாட்டை வெளியிடும்படி இந்த இரு கட்சிகளையும் கோரியுள்ளனர்.

இதன் நோக்கம் தேர்தலின் பின் பதவிக்கு வரும் கட்சி தமிழர்களுக்கு உரிமை எதனையும் வழங்கிவிடக் கூடாது என்பது தான்.

தேர்தலுக்கு முன்னரே இக்கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி விட்டால் தேர்தலில் அப்படியான கட்சியைத் தோற்கடித்து விடலாம் என்று இச்சக்திகள் கருதுகின்றன. அல்லது அப்படியான கட்சிமீது அழுத்தம் பிரயோகிக்கலாம் என்று எண்ணுகின்றன.

இந்த இரு பிரதான கட்சிகளும் ஆரம்பத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலோ அல்லது அதற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தெரிவுக்குழுக் கூட்டத்திலோ தமது நிலைப்பாட்டையோ அல்லது தீர்வுத் திட்டத்தையோ வெளியிடவில்லை. வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாக மட்டும் இந்தக் கட்சிகள் தெரிவித்திருந்தன.

தற்போது தேர்தல் நெருங்குவதால் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இக்கட்சிகள் தமிழர்களுக்கு சிறிது விட்டுக் கொடுத்து விடலாம் என்று இந்த தென்னிலங்கைச் சக்திகள் அஞ்சுகின்றன போலும்.

திரு. தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான இலாத மக்கள் ஐக்கிய முன்னணி அதன் வடக்கு-கிழக்குக் கொள்கை காரணமாக சிறிமாவோ தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச்சேர முடியாமற் போனது —

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இ. தொ. கா. தலைவர் தொண்டமான் நிபந்தனையுடன் ஆதரவளிப்பது— மகா சங்கத்தினருக்கும் சிங்கள— பௌத்த தீவிரவாதத் தலைவர்களுக்கும் இந்த இரு கட்சிகள் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக நம்பப்படுகிறது.

நாடு குட்டிச் சுவராகி அழிந்துபோனாலும் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதில் பேரினவாதச் சக்திகள் உறுதியாக இருந்து வருகின்றன: தமிழர்களை ஒழித்துக் கட்டுவதே இவற்றின் நோக்கம்.

கடந்த நான்காண்டு யுத்தம் வடக்கு—கிழக்கை மட்டும் பாதிக்கவில்லை. தென்னிலங்கையிலும் பெரும் உயிர்ச் சேதங்களையும் உடைமைச் சேதங்களையும் ஏற்படுத்தி உள்ளது. நாட்டின் பொருளாதாரம் மீட்டெடுக்க முடியாத நிலையில் சரிந்து கொண்டிருக்கிறது.

எந்த ஒரு தீர்வையும் குழப்பும் நிலையிலேயே இன்னும் தென்னிலங்கையின் இனவாதச் சக்திகள் இருந்து வருகின்றன.

இச் சக்திகள் இருக்கும் வரை தமிழர்களுக்கு ஒரு சொற்ப சலுகையும் கிடைக்கப்போவதில்லை. சலுகைகளுக்காக கையேந்தும் நிலையிலும் இன்று தமிழன் இல்லை. தென்னிலங்கையில் காலத்துக்குக் காலம் இடம்பெறும் நிகழ்வுகள் தமிழர்களுக்கு தமிழீழம் ஒன்றே வழி என்பதையே உணர்த்துகின்றன.

தேசிய மீட்பு முன்னணியை கட்சியாக ஏற்க மறுப்பு

கொழும்பு, ஜூலை 14

தேசிய மீட்பு முன்னணி என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை அங்கீகரிக்க தேர்தல் ஆணையாளர் மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான ஜே.வி.பி, ஆரிய புலேகொட தலைமையிலான ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி மற்றும் சில சிறிய அமைப்புகள் சேர்ந்துள்ளன.

கடந்த மாதம் 24ஆம் திகதி ஆரிய புலேகொட தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து தேசிய மீட்பு முன்னணியை அங்கீகரிக்கக் கோரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

முன்னணியின் சின்னமாக ''மலர் சாடி'' (Flover Vase) தரப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

எனினும்-தேர்தல் ஆணையாளர் விண்ணப்பத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

(ஐ-எ)

சு.கவில் சர்வானந்தா சேர்வதை தடுப்பதற்கு முயன்றார் குமார்!

கொழும்பு, ஜூலை 13

முன்னாள் பிரதம நீதியரசரும், மேல்மாகாண ஆளுநருமான திரு. எஸ் சர்வானந்தா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்வதைத் தடுப்பதற்கு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சிப் பிரமுகர் ஜி எல். பீரிஸ் திரு. சர்வானந்தாவைச் சந்தித்து அவரை சுதந்திரக் கட்சியில் சேர்த்து தேசியப் பட்டியல் எம். பி யாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததை அறிந்த குமார் பொன்னம்பலம் சர்வானந்தாவை அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்தார்.

''சுதந்திரக் கட்சியில் சேராதீர்கள்'' என்று சர்வானந்தாவிடம் குமார் பொன்னம்பலம் இரந்து கேட்டுக் கொண்டதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

குமாரின் வாதங்கள் சர்வானந்தாவிடம் எடுபடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சர்வானந்தா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தால் அவரை ஆளுநர் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கியது நியாயமாக்கப்பட்டு விடும் என்று குமார் பொன்னம்பலம் பின்னர் சண்டே ரைம்ஸிடம் தெரிவித்தார்.

(இ-எ)

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான யாழ். இந்து அன்னை

முன்னாள் பிரதி அதிபர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அன்று முகிழ்ந்தது யாழ். இந்து

இன்று சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான முதன்மை முகாமாகவும் அது திகழ்கிறது

— இவ்வாறு குறிப்பிட்டார் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் கப்டன் என். சோமசுந்தரம்.

யாழ். இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு பெருமையுடன் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பதில் அதிபர் திரு. என். அருளானந்தம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இந்த விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் கப்டன் சோமசுந்தரம் மேலும் கூறியதாவது:

விளையாட்டுத் துறை முதல் கல்வித் துறைப் பெறுபேறுகள் வரை பல்வேறு துறைகளிலும் நிலைநாட்டிய சாதனைகள் தான் யாழ். இந்துக் கல்லூரி தேசியக் கல்லூரியாக உயர்த்தப்பட்டமைக்குக் காரணமாகும்.

யாழ். இந்துவின் நற்பேர்களை அறியாத கல்வி அதிகாரிகள் சிலர், யாழ். இந்து பற்றியும் கல்வித் தரம் குறித்தும் ஆங்காங்கே தவறான கருத்துக்களைக் கூறி வருகிறார்கள்.

கல்வி நிலை தாழ்ந்து விட்டதாகக் கூறும் கல்வி அதிகாரிகளின் கல்விநிலை குறித்து இந்தச் சமூகம் அறியும்.

தமிழீழப் போராட்டத்தையும் தேசியக் கல்லூரிகளையும் இணைத்தும் கூட இவர்கள் தவறாகப் பேசுகிறார்கள்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக முகிழ்ந்த எமது கல்லூரி இன்று சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான முதன்மை முகாமாகத் திகழ்கிறது.

இந்துக் கல்லூரியிலிருந்து உருவான மாவீரர்களை மட்டும் வைத்து ''இந்துவின் விழுதுகள்'' என்ற நூலை வெளியிடக்கூடிய அளவுக்கு மாவீரர்கள் எண்ணிக்கையைப் பெற்று, பெருமை கொண்டவள் யாழ். இந்து அன்னை — இது ஒன்றேபோதும் யாழ். இந்துவின் விடுதலை வேட்கையை விளக்க.

கடந்த வரலாற்றையும் சமகால நடப்புகளையும் புரியாமல் வாய்க்கு வந்தபடி உரையாற்றுவதை பொறுப்பான அதிகாரிகள் நிறுத்த வேண்டும். — என்றார்.

திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கினார்.

செல்லத்துரை இல்லம் விளையாட்டுப் போட்டியில் முதல் இடம்பெற்றது. (உ)

சிமெந்து ஊழியர் சம்பளம்

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜூன் மாதத்துக்கான சம்பளம் இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12மணி வரை வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் வைத்து வழங்கப்படும் என தொழிற்சாலை கணக்காய்வாளர் திரு. க. வை. இரவிதாசன் அறிவித்துள்ளார். (உ)

புலிகளின் குரல் வானொலியில்

14 – 07 – 1994
வியாழன் இரவு
★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — உரை — நூல்களும் நூல்களின் பயன்களும்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம், யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீட பயிரியல் துறைத் தலைவர் எஸ். இராசதுரை அவர்களுடனான செவ்வியின் இறுதிப்பகுதி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து— நடு ஆழத்தது என்ற புத்தகத்திலிருந்து பங்களாதேஷ் தேசிய விடுதலைப்போர் என்ற கட்டுரையின் சில பகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
வெள்ளி காலை
15 – 07 – 1994
★ 7.02 — மாவீர வணக்கம்
★ 7.15 — விடுதலைகானங்கள்
★ 7.30 — செய்திகள்
★ 7.35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலைகாவலர்கள் நிகழ்ச்சி தொடர்ந்து

கிழக்கு பல்கலைக்கழக நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,, ஜூலை 14

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் கொழும்பு வாட்பிளேசில் உள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவான விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பான கடிதங்கள் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

வவுனியாவில் பொது நூலகம்

யாழ்ப்பாணம் ஜூலை 14

கரும்புலிகள் நினைவாக வவுனியாக் கோட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொது நூலகம் ஒன்றை அமைத்துள்ளனர் கடந்த 5ஆம் திகதி அந்த நூலகத்தை வன்னி மாவட்ட தளபதி திரு. குட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (ஐ)

சந்திரிகாவை கொல்லும் எண்ணம் புலிகளுக்கு இல்லை

''ராவய'' பத்திரிகையில் தகவல்

ஸ்ரீ. ல. சு. கவின் பிரதித் தலைவர் சந்திரிகாவை கொலை செய்ய விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகி வருகின்றது என்பது அரசின் அப்பட்டமான பொய்யாகும்.

—இப்படி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த பி. பி. ஸி. சிங்கள சேவையின் செய்தியாளருக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

''ராவய'' சிங்கள வார இதழ் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

'சந்திரிகாவுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய எண்ணம் எமக்கு கிடையாது. அவர் மீது எமக்கு விரோதம் எதுவுமில்லை. மிகுந்த கௌரவம் தான் உண்டு. 'எனவே எமது பாதுகாப்பு பற்றி கவலையை விட்டு விட்டு அரசாங்கத்திடமிருந்து சந்திரிகாவை பாதுகாப்பாக இருக்கச் சொல்லுங்கள்.

—இவ்வாறு திரு. பாலசிங்கம் கூறியதாக 'ராவய' குறிப்பிட்டுள்ளது. (உ-9)

சோமவன்ஸவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இல்லை

1988 – 89 களில் தென்பகுதியில் இடம்பெற்ற தீவிரவாதச் செயல்கள் தொடர்பாக ஜே. வி. பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மீது எதுவித குற்றப்பத்திரிகைகளும் கிடையா.

பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா முன்கண்டவாறு ''சண்டே லீடர்'' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

அமரசிங்க மீது வழக்கு எதுவும் இல்லை. அவர் சுதந்திரமாக வந்து போகலாம்— என்று இரகசியப் பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஷ தெரிவித்தார். (உ-எ)

போலி கடவுச் சீட்டு மூலம் சோமவன்ஸ வருகை

கொழும்பு, ஜூலை 13

இந்தியப்பிரஜை என்ற போர்வையில் போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி சோமவன்ஸ அமரசிங்க நாடுதிரும்பி விட்டார் என்பதை உள்ளூர் ஜே. வி. பி. யினர் உறுதிப்படுத்தியிருப்பதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

சோமவன்ஸ நாடு திரும்பியதை அரசாங்க உளவுத் துறையினர் ஊர்ஜிதம் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜே. வி. பி. தலைவர் நாடு திரும்பி விட்டார் என்ற செய்தி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சி அலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

ஜே; வி.பி. மீண்டும் செயல்படுவதற்கு செல்வாக்கு மிக்க முன்னாள் அரசியல் வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் நிதி உதவி வழங்க முன் வந்துள்ளனர் என்று அரசியல் வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுவதாக ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஆதரவளிக்க முன்வந்துள்ள வர்த்தகப் பிரமுகர்களில் ஆடை தயாரிப்பாளர் ஒருவரும் உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

நல்லூரில் ஐந்து நாட்கள் வருடாந்த கம்பன் விழா

ஜூலை 20 முதல் 24 வரை

யாழ்ப்பாணம், ஜூலை 14

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் வருடாந்த கம்பன் விழா எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை — ஐந்து நாட்களுக்கு - நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் நடைபெறவுள்ளது.

இம்முறை விழாவில் கம்பன் கழக வெளியீடான ''அகலிகை'' என்ற தொகுப்பு நூல் வெளியிடப்படும்.

25 ஆயிரம் ரூபா பணத்தையும், தங்கப்பதக்கத்தையும், விருதையும் உள்ளடக்கிய ''மகர யாழ் விருது'' இம்முறை மறைவுக்குப் பிந்திய விருதாக அமரர் பேராசிரியர் க. துரைராசாவுக்கு வழங்கப்படவுள்ளது.

பட்டிமண்டபம் வழக்காடு மன்றம், சுழலும்சொற்போர், கவியரங்கு, ஆய்வரங்கு, இசை மழை இளைஞர் அரங்கு ஆகிய வழமையான இலக்கிய நிகழ்ச்சிகளுடன் இம்முறை புதிய நிகழ்வுகளாக செந்தமிழ் நாடாளுமன்றம், ஆடல் வேள்வி என்பனவும் இடம் பெறவுள்ளன. (ஐ - 111)

தமிழறிஞர் விருது பெறும் ஆறு பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கம்பன் விழாவை ஒட்டி அகில இலங்கை கம்பன் கழகம் வருடாந்தம் வழங்கிவரும் ''தமிழறிஞர் விருதுகள்'' இம்முறையும் வழங்கப்படவுள்ளன: இந்த விருதுகளைப் பெறவுள்ள ஆறுபேரின் பெயர்களை கம்பன் கழகம் வெளியிட்டுள்ளது.

திரு. நம. சிவப்பிரகாசம், திரு. கே. ஐயாத்துரை, திரு. மு. ஞானப்பிரகாசம், அருட்கவி சி. விநாசித்தம்பி, வைத்திய கலாநிதி இராமசுவாமி, வரதர் ஆகியோர் இம்முறை தமிழறிஞர் விருதைப் பெறவுள்ளனர். இவர்களுக்கான இந்த விருதுகள் கம்பன் விழாவில் வழங்கப்படும். (ஐ)

ஜனாதிபதித் தேர்தலில் ஹேமா போட்டியிடுவதை தவிர்க்க டி.பி. செய்த சதி

ஜனாதிபதித் தேர்தலில் ஹேமா பிரேமதாஸா ஒஸி அபே குணசேகராவின் தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட திட்டமிட்டிருப்பதாக வெளியான தகவலை அடுத்தே—

முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது என்ற முடிவை ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு ஹேமா போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு ஆதரவளிப்பதென ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள விஜேதுங்க எதிர்ப்பாளர்கள் முடிவு செய்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னேஸ்வரர் உற்சவம் தேர்தலால் ஒத்திவைப்பு

பொதுத் தேர்தல் காரணமாக இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த சிலாபம் முன்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தை பின்போடுவதற்கு ஆலய அறங்காவலர் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய— வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் 23 இல் ஆரம்பமாகி 28 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது தேர்த்திருவிழா செப்ரெம்பர் 18 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 19ஆம் திகதியும் இடம்பெறும். (ஐ-எ-6)

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்துவது அப்பட்டமான ஒரு வாக்குக் கொள்ளை!

'யுக்திய' சிங்கள வார இதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் இருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதியைப் பிடித்து விட்டோம் என ஐ. தே. க. அரசு பல தடவைகள் கூறி வந்தது.

தென் மாகாணசபைத் தேர்தலின்போது, ஸ்ரீலங்காவை ஒரு நாடாக வைத்திருக்கப் பாடுபடப்போவதாக ஜனாதிபதி முழக்கமிட்டார். இந்த யுகத்தில் ஈழம் வழங்கப்படமாட்டாது என்பது தான் அவரது நிலைப்பாடாக இருந்தது.

வடக்கின் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இன்னமும் உள்ளது என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

விஜேதுங்காவின் ஓராண்டு கால ஆட்சியில் வடக்கில் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதா, அரசியலை முன்னெடுத்துச் செல்வதா என்பது குறித்து எந்தப் பிரயத்தனமும் அரசு எடுக்கவில்லை;

ஜே. ஆரின் ஆட்சி உபாயங்கள், தந்திரங்கள் நிறைந்ததாக இருந்தது. பிரேமதாஸாவின் அரசு சண்டையும் சமாதானமும் என்ற போக்கில் அமைந்திருந்தது.

விஜேதுங்க அரசு யுத்தத்தை நடத்துவது என்ற கொள்கையை எடுத்த பின்னர் தான் மணலாறு, பூநகரி, கிளாலி ஆகிய போர் முனைகளில் ஆயிரக்கணக்கான படையினரை பறிகொடுக்க நேர்ந்தது. இதனைத் தவிர, விடுதலைப் புலிகளின் வாயில் இருந்து தப்புவதற்கான வேறெந்த முயற்சிகளையும் விஜேதுங்க அரசு எடுக்கவில்லை.

தெற்குப் பகுதியில் கேந்திர அரச மற்றும் பாதுகாப்பு நிலையங்களை வெடி வைத்து சாம்பலாக்கக் கூடிய குண்டுகளுர். அக்குண்டுகளுடன் தங்கள் உயிரையே தியாகம் செய்யக்கூடிய தமிழ் இளைஞர்களும் உருவாகுவதற்கான முழுப்பொறுப்பையும் ஐ. தே. க. அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1980களின் தொடக்கத்தில் ஐ. தே. க. அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் விரோதக் கொலைகள் தான், இலட்சியத்தை அடைவதற்காக தங்களை அழிக்க தமிழ் இளைஞர்களைத் தூண்டியது.

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமல்ல கொழும்பிலும் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது; கொழும்பில் ஒரு பாரிய குண்டு வெடித்தால் அதனால் ஏற்படக் கூடிய சேதங்களை நினைத்து பார்க்கக் கூட முடியாமல் உள்ளது.

பத்து வருடங்களுக்கு மேல் இடம்பெற்றுவரும் குண்டு வீச்சுக்களினால் உருக்குலைந்து போயுள்ள யாழ். குடாபோன்று —

விலை மதிக்க முடியாத வாழ்க்கையை அனுபவித்து வாழ முடியாத துன்பத்தில் வாடும் யாழ். குடாநாட்டு மக்களைபோன்ற ஒரு நிலை தான் ஒரு பாரிய குண்டு வெடிப்புடன் கொழும்பு பிரதேசத்துக்கும் கொழும்பு வாழ் மக்களுக்கும் ஏற்படும்.

விடுதலைப் புலிகளுடன் தந்திரோபாய பேச்சுக்களை நடத்தி கபடமான முறையில் வட மாகாணத்தில் தேர்தலை நடத்த விஜேதுங்க அரசு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன; இதனை அடுத்து யாழ். அரச செயலகத்தைத் தெல்லிப்பழைக்கு மாற்ற எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்து விட்டார்கள். இதனால் அரசு அதிர்ச்சியடைந்தது.

வடக்கில் போட்டியின்றி எம்.பிக்களைத் தெரிவு செய்ய வைப்பதன் மூலம் அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றது. இது தொடர்பாகப் பிரதமர் நடத்திய பேச்சுக்கள் பயனளிக்கவில்லை. நாங்கள் ஏமாற்றும் இவ்வாறான முயற்சிகளால் எந்தப் பலனும் ஏற்படாது. போட்டியின்றி எம். பிக்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் தமிழ் மக்களையும் அவமதிக்கும் செயலாகும்.

வடக்கில் தேர்தலை நடத்த முடியாது என்று இராணுவத் தளபதி கூறிவிட்டார். தேர்தலை நடத்த அனுமதிக்க முடியாது என்று விடுதலைப் புலிகளும் கூறிவிட்டார்கள். ஆனால் தேர்தலை நடத்தியே தீர்வது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வாறான நிலையில் தேர்தலை வடக்கில் நடத்துவது அப்பட்டமான வாக்குக் கொள்ளையாகும். அது மட்டுமல்ல கேலிக் கூத்தான செயலாகவும் இது அமைகின்றது.

வடக்கில் இயல்பு நிலை ஏற்பட்டு மக்கள் சுயமாக வாக்களிக்கும் நிலை ஏற்படும் வரை தேர்தல் நடத்தப்படக் கூடாது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒன்றை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு ஏதாவது முறையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண முயலும் அரசியல் கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சியும் ஆட்சியை பிடிக்க முடியாதென்பதே உண்மை நிலையாகும்.

★

ஆணே உனக்கு என்ன விலையா?
அவனியில் நீ உயிரற்ற இலையா?

மரவளம் பெருக்கிட
மண்வளம் சிறப்புறும்

ஐ.தே.கவினரின் தாக்குதலுக்கு இலக்கான

எதிரணி ஆதரவாளர் மீது பொலீஸ் கண்ணீர்ப் புகை!

ஐ. தே. க. ஆதரவாளர்களின் தாக்குதலில் காயமடைந்த தமது ஆதரவாளர் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததாக வெண்ணப்புவவின் முன்னாள் எதிரணி எம். பியான மில்ரோய் பெர்னாண்டோ முறைப்பாடு செய்துள்ளார்.

அமைச்சர் பெஸ்டல் பெரேராவின் ஆதரவாளர்களே தமதுவரவேற்பு கூட்டத்துக்கு வந்த தமது ஆதரவாளர்களைத் தாக்கியதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை —

திங்களன்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது எதிரணிக்குப் பாதகமாகவும் ஆளும் கட்சிக்குச் சாதகமாகவும் பொலீஸார் நடந்துகொண்ட விதம் அரசாங்கம் பொதுத் தேர்தலை எவ்விதம் நடத்த எண்ணியுள்ளது என்பதை தெளிவாக்கியிருக்கிறது.

முன்னாள் எதிரணி எம்.பி. ஜோன் செனவிரத்தின நேற்று வெரித்தாஸ் சிங்களச் சேவைக்கு இவ்வாறு தெரிவித்தார். [ஒ-எ-6]

மரண அறிவித்தல்கள்

சண்முகலிங்கம் சுதாகரன்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுவிஸில் வசித்தவருமான சண்முகலிங்கம் சுதாகரன் (சுதா) 10-07-94இல் சுவிஸில் அகால மரணமானார்.

இவர் சண்முகலிங்கம் (அப்பு) — கனகமணி ஆகியோரின் அன்பு மகனும், கோமதிதேவி, தயாபரன் (ராஜன்) — (சுவிஸ்), கிசோகரன் (U. K.), தவீஸ்வரன் (U. K.) ஆகியோரின் சகோதரனும், ராஜேஸ்வரன் (கருடா கூல் பார்), ஜெனி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தா, திவாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. ராஜேஸ்வரன்
ஈச்சமோட்டை.
(31905)

சின்னத்தம்பி கந்தையா

உசன் மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா 13 - 07 - 94 இல் காலமாகிவிட்டார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வரட்ணம் (சவுதி அரேபியா), நவரத்தினம், செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணி (செயலகம் யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகமுத்து (கச்சாய்), சிதம்பரப்பிள்ளை, நடராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும், துஷிதா (சண்டிக்குளி மகளிர் கல்லூரி), மயூரன் (கொழும்பு இந்துக் கல்லூரி), நிருஷ்யா டிக்குளி மகளிர் கல்லூரி), றஜீவன், வர்மிலா, அஜிந்தன், லக்ஷ்மினா, ஷமினா, பிரணவன், சஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14 - 07 - 94) மாலை 3 மணிக்கு உசனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வரத்தினம் (மகன்)
(31908)

சீ. செல்லத்துரை

(ஈசன்ஸ் அந்திய கால சேவை - சாரதி)

சோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு மில் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவருமான சீனியர் செல்லத்துரை கொழும்பில் 9-7-94 அன்று காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், சேதீஸ்வரன் (வைற்ஹவுஸ்), ஜெகதீஸ்வரன் (இத்தாலி) இராஜேஸ்வரன், மாலினி, யோகேஸ்வரன் (ஜேர்மனி), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வவி (இத்தாலி), உதயகுமார் (பிரான்ஸ்), உஷானி, றாம்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(31907)

வேலாயுதர் அருளம்பலம்

இணுவில் தெற்கைச் சேர்ந்த வேலாயுதர் அருளம்பலம் காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும், கமலநாதன், ரவீந்திரன், குணானந்தன், தயானந்தன், கிரிசாம்பான் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, சின்னத்தம்பி, செல்லையா ஆகியோரின் அருமைச்சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு காவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
அ. கமலநாதன்
(மகன்)

அருளானந்த வாசம்,
இணுவில் தெற்கு,
இணுவில்.
(31910)

ஆலய உற்சவங்கள்

கொழும்புத்துறை எழிலூர் கடலை தாலாட்டும் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை மாலை 5-15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். பின்னர் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5-15 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகும்.

திருப்பலி நற்கருணைப் பவனி 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5-15 மணிக்கு இடம்பெறும்.

திருவிழா திருப்பலியும் திருச்சுருவப் பவனியும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு. இ. யோ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும். (உ-30)

★ ★ ★

உடுவில் குமர கோட்டம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் ஞான சக்திவேல் நூதனப் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் நாளை (வெள்ளி) காலை 8-20 மணி முதல் நடைபெறவுள்ளன. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-152)

★ ★ ★

வண்ணை வடமேற்கு நொச்சியம்பதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயிலில் இன்று காலை 9 மணிக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும், மகேஸ்வர பூசையும் இடம் பெறும். இன்று இரவு அம்பாள் தெரு வீதியுலா இடம்பெறும்.

★ ★ ★

மட்டுவில் - சந்திரபுரம் சலுவத்துச் சிவன்கோயில் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசர் மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 20 தொடக்கம் 10. 09 மணிவரை நடைபெறும். (க)

★ ★ ★

நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராசஇராசேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று காலை 10 00 மணிக்கு ஆரம்பமாகும். இரவு மணவாளக்கோலத் திருவிழா இடம்பெறும்.

★ ★ ★

வட்டுக்கோட்டை முதலிய கோயிலடி பேச்சியம்மன் ஆலய மகோற்சவம் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து எட்டு நாட்களுக்கு நடைபெறும். (உ-161)

★ ★ ★

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய முன்றிலில் நாளை பிற்பகல் 3 மணிக்கு 'அத்வைத தத்துவம்' என்ற பொருளில் டாக்டர் வி. சின்னப்பு ஞானவிருந்து உரை நிகழ்த்துவார். (உ-28)

★ ★ ★

கல்லியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் கோடிஸ்தம்ப பிள்ளையார் பிரதிஷ்டா கும்பாபிசேகம் இன்று மாலை கிரியைகளைத் தொடர்ந்து நாளை காலை உதயத்தில் இடம்பெறும். (உ)

★ ★ ★

கொழும்புத்துறை மணவியம்பதி அருள்மிகு ஸ்ரீஅம்மன் ஐயனார் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநடராசர் - சிவகாமி அம்பாளுக்கு இன்று ஆனி உத்தரமன்று மாலை 4 00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனைகள் வழிபாடும் இடம்பெறும். (உ-30)

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயிலின் ஆனி உத்தரம் நாதம்பிரான் பொங்கல் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். (உ-30)

★ ★ ★

சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோயிலில் இன்று காலை 9 மணிக்கு "சிவஞான சுரபி" எனும் தோத்திரத் திரட்டு நூல் வெளியீடு திரு ந. சிவசண்முகமூர்த்தி தலைமையில் நடைபெறும். (உ-28)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று அதிகாலை 5 00 மணிக்கு புதிதாக சிற்பவேலைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட புதிய மண்டபத்தில் நடராசர்-சிவகாமி அம்மன் விக்கிரகம் பிரதிஸ்டை செய்து வைக்கப்படும்.

ஆனி உத்தரம் தினமான இன்று விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டை அடுத்து நடராசா-சிவகாமி அம்மன் வீதியுலா வருவார். (உ-30)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் அரையிறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2. 30 மணி முதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

17 வயதுப் பிரிவு

★ உடுவில் மகளிர் எதிர் சண்டிலிப்பாய் இந்து ம. வி.

★ மெதடிஸ் மகளிர் எதிர் வட இந்து மகளிர்

19 வயதுப் பிரிவு

★ உடுவில் மகளிர் எதிர் கன்னியர் மடம் ம. வி.

★ சுண்டிக்குளி மகளிர் எதிர் மெதடிஸ் மகளிர்

பாடசாலைகளில்

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசில் நாள்விழா இன்று பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலய அரங்கில் அதிபர் திரு. க. தம்பு தலைமையில் இடம்பெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்துகொள்வார்.

★ ★ ★

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அபிவிருத்திக்காக வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்தும் நாடக விழா நாளை இரவு 7 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய அபிவிருத்திக்காக பாடசாலை அபிவிருத்திச் சபை நடத்தும் மாபெரும் கலை விழா நாளை வெள்ளி இரவு 7. 00 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் சர்வதேச சூழல் பாதுகாப்பு பற்றிய கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு நாளை வெள்ளி பி. ப. 1. 30 மணிக்கு அதிபர் திரு க. சிவபாதசுந்தரம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

கலந்துரையாடல்

பருத்தித்துறை புலோலி பிரதேச வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை புலோலி பிரதேசத்தின் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

★ ★ ★

பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான ஒரு முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் பஸ்நிலைய காரியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் பேச்சுப் போட்டிகளும் நாடகப் போட்டிகளும் இன்று வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் நடைபெறும். (க-30)

★ ★ ★

தெல்லிப்பழை தொலைக் கல்வி நிலைய பயிற்சி ஆசிரியர்களின் ஆரம்பக்கல்வி பிரிவு கண்காட்சியும், கலைவிழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (க-30)

★ ★ ★

அரியாலை சரஸ்வதி மத்திய நூல் நிலையம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் "பவள விழா"வை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு அமரர் வில்வநாதன் அரங்கில் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-30)

அரச அதிபரின் அலுவலகம் மீண்டும் மேல் மாடியில்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். அரச அதிபரின் அலுவலகம் இன்று முதல் செயலகத்தின் மேல் மாடியில் இயங்கும்.

விமானக் குண்டு வீச்சில் சேதமடைந்த யாழ். செயலகத்தின் மேல்மாடி திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததனை அடுத்து அரச அதிபரின் அலுவலகம் மீண்டும் மாடிக்கு மாற்றப்படுகிறது. (ஒ-4)

விபத்தில் பலி

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமானார்.

அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கொட்டடியில் வசித்த சங்கரப்பிள்ளை இராசையா (55 வயது) என்பவரே மரணமானவராவார்.

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த வேளை மோட்டார்சைக்கிள் விபத்துக்குள்ளான இவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் அங்கு மரணமானார். (ஒ-15)

நாளை

சந்நிதி சன் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை சாயிபஜனை இடம்பெறும். வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

கோப்பாய் கலாசாலை திடல்-கள போட்டி

கோப்பாய் ஆசிரியக் கலாசாலையின் வருடாந்த திடல்களப்போட்டிகள் கலாசாலை மைதானத்தில் நாளை (வெள்ளி) பிற்பகல் 1-45 மணி முதல் நடைபெறவுள்ளன.

உடற்கல்வி விரிவுரையாளர் திரு. வே. கா. கணபதிப்பிள்ளை தலைமையில் போட்டிகள் நடைபெறும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திரு. சீ. அந்தோனிமுத்து முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரனும் —

மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி எஸ். ரதியும் [illegible] (ஐ)

யாழ். மத்திய கல்லூரியின்
வர்த்தக பவளவிழா நிதிக்காக
ராஜன்ஸ் குழுவினர்
வழங்கும்
"தேனிசை மாலை"
இடம்: யாழ். மத்திய கல்லூரி
காலம்: 15-07-94 நாளை வெள்ளிக்கிழமை
அன்பளிப்பு: ரூபா 10, 25, 50, 100

விளம்பர அன்பளிப்பு;
லாவண்யா
யாழ்ப்பாணம்,
சுன்னாகம்.
V.T அன் சன்ஸ்
யாழ்ப்பாணம்.
(சி/8742)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
முக்கிய அறிவித்தல்
மொடேன் கல்வி நிலையம்
நெல்லியடி
பொறுப்பேற்கப்பட்டுள்ளது

மேற்படி நிறுவனம் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் ஒழுங்கு விதியினை மீறிய குற்றத்திற்காக விதிக்கப்பட்ட குற்றப் பணத்தினைக் குறித்த தவணைக்குள் கட்டத்தவறியுள்ளது. இதனால் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் மேற்பார்வையில் தனியார் கல்விப் பிரிவு மேற்படி நிறுவனத்தினைப் பொறுப்பேற்றுள்ளது.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன
ஒன்றியம்
யாழ், மாவட்டம்.
(சி/8743)

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய
அபிவிருத்தி நிதிக்காக
மாபெரும்
கலை நிகழ்ச்சி
இடம்:
மகளிர் ம. வி. திறந்த வெளி அரங்கு
காலம்:
நாளை (15-07-1994) வெள்ளிக்கிழமை மாலை 6 00மணிக்கு அன்பளிப்பு (நுழைவுச் சீட்டு) ரூபா: 500/- 250/- 100/- 50/- 25/-
இன்று (14-07-1994)வியாழக்கிழமை பி. பகல் 2-00 மணிக்கு பாடசாலை சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள்
அன்பளிப்பு (நுழைவுச் சீட்டு): ரூபா 10/-
நிகழ்ச்சிகள்
திலக நர்த்தனாலய மாணவிகளும் மகளிர் ம. வி. மாணவிகளும் இணைந்து அளிக்கும்
நடன நிகழ்ச்சிகள்
சங்கீத வித்துவான் பொன். சிறிவாமதேவன் ஆசிரியர் அவர்களும் அவரது மாணவ குழுவும் இணைந்து நடத்தும்
இசை நிகழ்ச்சிகள்
அனைவரும் திரண்டு வருக! ஆதரவு நல்குக!
பாடசாலை அபிவிருத்தி சபை.
சிறப்புற வாழ்த்துபவர்:
எரிக் கனேஷ்
(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)
566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(31898)

அழகு சாதனப் பொருள்கள் ❋ எவர்சில்வர் பொருள்கள் ❋ ஆண்கள், பெண்களுக்குரிய தையல் பொருள்கள்
❋ மணிக் கூட்டு வகைகள் ❋ பிளாஸ்டிக் பொருள்கள்
போன்றவற்றினை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
சில்லறையாகப் பெற்றுக்கொள்ள:
ஜெயா அழகு மாடம்
177 A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள:
ஜெயா அழகு மாடம்
187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: தலைச் சோடனைகள் வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை [illegible] உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] 14-07-1994 [illegible]